DINAMANI

27 AUG 2023

PAGE 5

# புதுவை பல்கலை.யில் கணிதவியல் மாநாடு

புதுச்சேரி, ஆக.26: புதுவை மத்திய பல்கலைக்கழகத்தில் சர்வதேச அளவிலான கணிதவியல் மாநாடு 5 நாள்கள் நடைபெற்றது.

உலகின் பல்வேறு பகுதிகளில் உள்ள கணிதவியலாளர்களை ஒன்றிணைக்கவும், இளம் ஆய்வாளர்களிடையே ஆர்வத்தை மேம்படுத்தும் வகையிலும், பல்கலைக்கழகத்தின் கணிதவியல் துறை சார்பில் மாநாடு நடைபெற்றது.

கடந்த 21-ஆம் தேதி தொடங்கிய மாநாட்டிற்கு பல்கலைக்கழக இயக்குநர் தரணிக்கரசு தலைமை வகித்தார். பல்கலைக்கழக கணிதத் துறையின் துணை பேராசிரியர் ராகேஷ் குமார் பர்மார் வரவேற்றார். பதிவாளர் பேராசிரியர் ரஜ்னிஷ் பூடானி வாழ்த்திப் பேசினார். சென்னை ஐஐடி தலைமைப் பேராசிரியர் பொன்னுசாமி, குரேஷிய பல்கலைக்கழகப் பேராசிரியர் திபோர் கே பகானி, எமிரேட்ஸ் பேராசிரியர் ரிஜாகா குரோசியா ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

மாநாட்டில் 2, 3 மற்றும் 4- ஆவது நாள்களில் தென் கொரியா, ஜப்பான் ஆகிய நாடுகளின் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் சிறப்புரையாற்றினர்.

வெள்ளிக்கிழமைநடைபெற்ற மாநாட்டு நிறைவு நிகழ்ச்சியில் பெங்களூரு ஐஐஎஸ்சி பேராசிரியர் தீர்த்தங்கர் பட்டாச்சார்யா விண்வெளி அணுகுமுறைகள் குறித்து சிறப்புரையாற்றினார். இதில், மலேசிய அறிவியல் பல்கலைக்கழகப் பேராசிரியர் டோடோர்செவிக் உள்ளிட்டோர் கருத்தரங்க உரையாற்றினர்.